புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# புலவர் நாஞ்சில் நாரண. தொல்காப்பியன் மரபுக்கவிதைகளில் மருதத்திணை வாழ்வியல்

ர.சந்தியா,
பதிவு எண் :21113154022027,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்க்கலை ஆய்வகம் ,
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

முனைவர். இரா. சொர்ண பமிலா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

ஆய்வுச் சுருக்கம்

திணை என்பதற்கு குடி என்று பொருள். இத்திணைகளை வாழும் நில மக்களின் வாழ்வியல் முறைகளுக்கேற்ப பிரித்து வகுத்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளுக்கும் தொல்காப்பியர் இலக்கணத்தை வகுத்துள்ளார். பாலைத் திணையினை தவிர்த்து மீதமுள்ள நானிலம்களுக்கும் நிலப்பகுப்புகள் இருப்பதை முன்னோர்கள் நானிலம் என்னும் பெயரால் உலகத்தை பகுத்துள்ளதை அறிய முடிகிறது. இத்தகைய நானிலங்களுக்குரிய வாழ்வியல் ஒழுக்கங்களான உழைப்பு, காதல், திருமணம் ஆகியவைகள் இருப்பதை அறியலாம். மருதத்திணை என்பது வயலும் வயல் சார்ந்த இடத்தைக் குறிக்கும். வயலின் வளத்தையும், அதன் மூலம் பயன்பெறும் மக்களின் வாழ்வியல் நிலைகளையும் எடுத்துரைக்கும். மருதத்திணையில் வாழும் மக்கள் அன்பிற்கு மட்டுமே தங்களை ஈடுப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவ்வுலகிற்கு அடையாளங்களாக நீர், நிலம், காற்று இருப்பது போன்று மருதத்திணை மக்களின் வாழ்வியல் நெறியின் ஒழுக்கங்களாக இருப்பது அன்பு, பாசம், கருணை ஆகியவைகள். மருத நில வாழ் மக்கள் அனைவரும் உறவுகளுடன் ஒன்றிணைந்து மகிழ்வோடு வாழ்ந்து வந்தனர். சூரியன் தனது கரங்களால் பூமியினை தொடும் முன்பாக உழவர்கள் கழனிக்கு சென்று வயலின் வளத்தினை அதிகப்படுத்தினர். சேறாக காட்சித் தரும் நிலத்தினை சீராகச் சமம் செய்து நாற்று நட்டு இயற்கை அன்னையின் ஆசியினை பூமிக்கு வழங்கும் படியாக செய்வர். கதிர்கள் முற்றி வளர்ந்திருக்கும் நிலையிலும், நெல் மணிகள் மண்ணில் சிதறிக் கிடக்கும் அத்தருணத்திலும் பறவைகள், எலிகள் மற்றும் நண்டுகள் பயிரினை அறுத்தெடுக்க வரும். இதனால் நெற்கதிர்களை பாதுகாக்க வலியதான வரப்புகளை அமைத்து மருதநில மக்கள் பாதுகாத்தனர். நெல்லரிசி மட்டுமின்றி கிழங்கு வகைகளையும் உணவாக பயன்படுத்தினார்கள் என்பதையும் புலவர் நாஞ்சில் நாரண. தொல்காப்பியன் மரபுக்கவிதைகள் வழி வெளிப்படுத்துகிறார்.

திறவுச் சொற்கள்:

மருதத்திணை, வாழ்வியல் ,உழவு, உணவு, நாற்று நடுதல், காவல்.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கை பண்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளன. சங்க காலத்தில் உழவுச் சார்ந்த மருதநில பண்பாடு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. உழவுச் சார்ந்த தொழில்கள் அனைத்தும் சமூக மாற்றத்திற்கான அடிகோலாய் தோன்றியிருக்கிறது. இத்தகைய உயர்வான தொழிலை கொண்ட திணையாக விளங்கும் மருதத்திணை என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐவகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். மருதத்திணையில் வாழும் மக்கள் அனைவரும்

*ஒன்றுபட்டு நிலத்தினை சமன்செய்து உயர்வான நிலங்களாக மாற்றியமைத்து வயலின் வளத்தினை பெருகச் செய்தனர். இந்நிலங்கள் அனைத்தும் நன்செய் மூலம் நலனைக் காக்கும் தாயாக மருதநில மக்களுக்கு மாறியது. உழவனின் உழைப்பிற்கு ஏற்ற கூலியாக நெல்லை அளந்து அளிப்பார்கள். வயல் வரப்பிற்குள் நெற்கதிர்களை மட்டும் பயரிடாமல் அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் பயிரிட்டு உலகின் பசி என்ற துன்பத்தினை நீக்கும் சக்தியானது உழவன் ஒருவனுக்கு மட்டுமே உரியதானதாகும். இத்தகைய உழவனை வளர்த்தெடுக்கும் பெருமை மருதத்திணையை சார்ந்துத்திருக்கும். மருத நிலம் கள்ளமில்லாத நற்குடி மக்கள் கலந்து வாழும் திணையாக அமைந்திருக்கிறது. முளைப் பயிரின் வழியாக நெற்கதிரினை பெருக்கி, கருநெல்லாக மாற்றி தனது விவேகத்தால் வயலின் வளத்தினை பெருக்கும் ஆற்றல் படைத்தவன் உழவன் என்ற மருதத்திணை வாழ் மக்கள். இவர்களது தொடர்பணியால் நெற்கதிரியின் வளமும், மருதத்திணையின் வளமும் கொழித்தது. உழவுத் தொழிலை உலகிற்கு ஈந்துக் கொடுத்த பெருமை தமிழுக்கும், தமிழின மக்களுக்கும் உரியது. இத்தகைய உழுத் தொழிலின் இருப்பிடமாக விளங்கும் மருதத்திணை மக்களின் வாழ்வியல் நெறிகளை புலவர் நாஞ்சில் நாரண. தொல்காப்பியன் தனது மரபுக்கவிதைகள் வழி காவியமாக படைத்துள்ளார். இம்மரபுக்கவிதையில் இடம்பெறும் மருதத்திணை மக்களின் வாழ்வியலின் தனித்துவத்தை இக்கட்டுரை வழி அறியலாம்.*

*திணை*

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று பண்டைத் தமிழரின் நிலப்பகுப்புகள் அமைந்துள்ளது. திணை என்னும் சொல்லுக்கு குடி என்றும் பொருள் உண்டு. குடிகள் வாழும் நிலமும் திணை எனப்பட்டது. இவ்வைந்து திணைகளும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியவை. திணை என்னும் சொல் நிலத்தின் அமைப்பு, வாழும் மக்களின் இயல்பு, விலங்குகள், பறவைகள், செடி, கொடிகள், மரங்கள், பயிர் வகைகள், மக்கள் வழிபட்டு வந்த தெய்வங்கள் ஆகியவற்றையும் குறித்து நிற்கும். தொல்காப்பியரும் தனது பொருளதிகார இலக்கண நூலில் திணைக்குரிய வரையறை வகுத்துள்ளார் என்பதை,*

*"கைக்கிளை முதலாம் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொல்.பொருள்.நூ-1)*

*எனும் நூற்பா வழி அறிய முடிகிறது. தொல்காப்பியர் கைக்கிளை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பெருந்திணை என திணைகளை ஏழாகப் பகுத்துள்ளார். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைக்களுக்கு மட்டுமே நிலப்பகுப்புகள் உண்டு. பாலைத்திணைக்கென தனியே நிலம் இல்லை இக்காரணம் பற்றியே முன்னோர்கள் நானிலம் (நான்கு+நிலம்) என்னும் பெயரால் உலகத்தை குறித்தனர் என்பதை,*

*"அவற்றுள்*
*நடுவண் ஐந்திணை நடுவனது ஒழியப்*
*படுதிரை வையம் பாத்தியே பண்பே" (தொல்.பொருள்.நூ -15)*

*இந்நூற்பா வழி தொல்காப்பியர் விளக்கியதை அறிய முடிகிறது. மேலும் நன்னூலாரும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பெயர்கள் ஆகும் என்பதை அமைத்துள்ளார்.*

*"குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம்*
*நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே" (நன்.அகத் நூ -6 )*

*மொழிக்கு மட்டுமன்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரை மட்டுமே சார்ந்துள்ளது. "நானிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகளில் வாழ்ந்த மக்களுக்கு உழைப்பு, காதல், திருமணம் இவ்வொழுக்கங்கள் அனைத்தும் தமிழருக்கு உரியன" (தமிழக.வர.பக்-128) என்ற நூலானது நானிலத்துக்குரிய மக்களின் வாழ்வியல் ஒழுக்கங்களை எடுத்துரைக்கிறது.*

*மருதத்திணை*

*மருத நிலம் முல்லை நிலத்துக்கும், நெய்தல் நிலத்துக்கும் இடைப்பட்டப் பகுதியில் இருப்பது. வயலும் வயல் சார்ந்த இடத்தையே மருதத்திணை எனக் குறிப்பிடுவார்கள். இந்நிலத்திற்குரிய முக்கிய தொழிலாக உழவுத் தொழில் அமைந்திருக்கிறது. நெற்கதிர்களால் நிறைந்த வயல்வெளிகளை வரப்புகள் பங்கு வைத்து கொள்வது போன்று அமைந்துள்ளன. வயலில் நெற்கதிர்களானது வனப்பிற்கு (காடு) ஈடாக செழுமையாக வளர்ந்து ஓங்கி நிற்கிறது. வயல் வெளிகளை சுற்றிலும் வாழை மரங்கள் மிகுதியாக மாணப்படும். அம்மரங்களில் பூத்திருக்கும் வாழைப் பூவானது ஞாயிற்றைக் கண்டு முகம் மலரும் தாமரைப் போல இதழ்களை மெதுவாக விரித்து நிற்கும் அழகு நிறைந்ததாக மருதத்திணை காட்சியளிக்கிறது.*

*“வயல் வெளியைப் பங்கு வைக்கும்*
*வரப்பெல்லாம் பறகள் ஓங்கி*
*வயல்நெல்லின் வனப்பீற் கீடாய்*
*வளர்ந்தோங்கி செழித்த தங்கே” (முரசு. மோசி. பா-389)*

*அறுவடைக்கு தயாராகும் நிலையில் இருக்கும் நெற்கதிர்கள் அனைத்தும் தருக்களை (புற்கள்) போன்று உயர்வாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. நெற்ககிர்கள் பார்ப்பதற்கு கூர்மையான ஈட்டினைப் போல தோற்றம் தருகிறது. இத்தகைய பரந்து விரிந்த வயல் பரப்பினை தெளிந்த நீரினாலான ஆறானது இரண்டாக பாகம் பிரித்து நிற்கிறது. ஆற்று நீரினுள் நீந்தி செல்லும் மீன்கள் பிறந்த குழந்தையின் அழகிற்கு இணையாக மேயும் படி ததும்பி ஓடிகிறது. நெல்வளங்களின் மொத்த அழகினால் மருத நிலம் சிறந்து விளங்குகிறது என்பதை,*

*“புன்செய் இளமை பயிரெல்லாம்*
*புல்போல் தழைத்தே வளர்ந்நதிருக்க*
*நன்றாய் கதிர்கள் ஈட்டியென*
*நிமிர்ந்தே நிற்கி மணிமுற்ற” (முரசு.மோசி. பா -395)*

*இவ்வரிகள் மூலம் நாரண.தொல்காப்பியன் எடுத்துரைக்கிறார். மேலும்,*

*“ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி*
*ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்” (குறுந். பா-22)*

*என்ற குறுந்தொகை வரிகள் நல்ல கதிர்களை உடைய நெல் விளையும் வயலின் வரப்பினை உடையது மருதத்திணை என்பதை விளக்குகிறது. உழவர்கள் செய்யும் தொடர்பணியால் வறட்சி என்பதே ஏற்பட்டதில்லை. இந்நிலத்தில் வாழும் மக்கள் வறுமை மற்றும் துன்பம் அறியாமல் செழிப்போடு வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வளங்கள் பொங்கிக் கிடக்கும் திணையாக மருதத்திணை விளங்குகிறது என்பதை அறியலாம்.*

*வாழ்வியல் நெறிகள்*

*அன்பு என்ற உணர்வு நான் மனிதசமூகத்தின் அழியாத செத்தாக இருக்கின்றது. இத்தகைய அன்பு நெறியல் தான் மக்கள் அனைவரும் வாழ்ந்து வருகின்றனர். அன்பு, பாசம் மற்றும் கருணை ஆகிய மூன்றும் மருத நிலத்து மக்களின் செழுமையான வாழ்விற்கு அடையாளங்களாக இருக்கிறது. சுழித்து சுழலும் நீரைப் போல சுற்றத்தாருடன் ஒன்றாகக் கூடி வாழ்ந்து வருகின்றனர்.விட்டுக்கொடுத்து வாழ்வது மட்டுமே வாழ்க்கை என்று உணர்ந்திருந்தார்கள். கயமை சூது ஆகிய இரண்டு குணங்கைகளையும் உறவுகளின் ஒற்றுமைகளை சீர்கெடுக்கும் வழிகள் எனக் கருதி வெறுத்தார்கள்.*

*“விட்டும் கொடுத்து வாழ்வதுதான்*
*வாழ்க்கை என்றே உணர்ந்திருந்தார்!*
*பட்டுப் படாமல் பேசுவதும்*
*பற்றற் றார்போல் நடப்பதுவும்*
*கட்டுப் பாட்டை இழப்பதுவும்*
*கயமை சூது வளர்வதற்கும்*
*ஒட்டு றவைவே குலைப்பதற்கும்*
*உரிய வழிகள் எனவெறுத்தார்” (நாஞ்.வள்.பா- 45)*

*ஒழுக்கம் என்பது உயிரை விட மேலகாகவும், ஒழுக்கத்தை சிதைப்போர் இழிந்தவராகவும் கருதினார்கள். இச்சிறப்பிற்குரிய குணங்களையெல்லாம் படைத்தவர்களாக*

மருதத்திணை மக்கள் இருக்கின்றனர் என்பதை நாரண.தொல்காப்பியன் நாஞ்சில் வள்ளுவன் என்ற மரபுக்கவிதை வாயிலாக தெளிவுப்படுத்துகிறார்.மேலும்

"சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என் பதுவே'' (நற். பா-210 )

தம்மோடு சூழ்ந்துள்ளவர்கள் படும் துன்பத்தை ஆராய்ந்து நீக்கி அவர்களது நெஞ்சமானது நோகாமல் பண்போடு நடந்துக் கொள்வதே சிறந்த செல்வமாகும். இக்குணங்களே மருதத்திணை மக்களிடம் பரவலாகக் காணப்படுவதை நற்றிணை பாடல் வரிகள் விளக்குகிறது.

உழவுத்தொழில்

விடியல் தொடங்கும் முன்பாக விழித்து எழுந்தவுடன் உழவு மாட்டிற்கு உணவான பருத்தி மற்றும் புண்ணாக்கு கலந்த கழுநீரை உண்ண கொடுப்பார்கள். பின்பு கழனிக்கு (வயல்) சென்று அகன்றிருக்கும் வரப்பினுள் நீரினை பாய்ப்பதற்கு தேவையான வழிமுறைகளை உருவாக்கினார்கள். நெல் விளைந்த வயலினுள் தினமும் நீர் பாய்ச்ச வேண்டியதில்லை. ஏனெனில் வயல் வரப்பின் வழியாக நீர் பாயும் வகையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். இச்செயலினால் நீரனாது எப்போதும் வயலில் தங்கியிருக்கும். நெற்கதிர்களும் பசுமையான வளத்துடன் வளர்ந்திருக்கிறது. வயலினுள் வாழும் வயல் நண்டுகள் தங்களுடைய இடுக்கினால் நெற்கதிர்களை வெட்டி உணவாக உண்ணும். இவ்வளங்கள் அதிகம் நிறைந்ததாக மருதத்திணை காணப்படுகிறது என்பதை,

''நெல்லும் செழித்து வளருகையில்
நெடிய காலால் நண்டெல்லாம்.
நல்ல உணவாய் நெல்லுண்டு
நாளும் வெட்டி பயிரழிக்கும்'' (நாஞ்.வள்.பா-28)

இவ்வரிகள் மூலம் நாரண. தொல்காப்பியன் மருத நிலத்தின் வளத்தினை எடுத்துரைக்கிறார். உழுது விதைத்த நெல்லினை அறுப்பதற்காக வயலுக்குள் வரும் உழவர்களிடம் நெற்கதிர்களை உண்ண வரும் மீன்கள் அதிகளவு கிடைக்கும். இதனால் நெல்லுடன் சேர்ந்து மீன்களையும் விற்கும் போது உழவரது தருவாயும் அதிகரிக்கும்.இத்தகைய வளங்கள் மிகுதியாக இருப்பது மருத்ததிணை என்பதை

''அரிகால் மாறிய அம்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல்'' (நற்.பா -210)

நற்றிணை வரிகள் மூலம் அறிய முடிகிறது.

வயல் பரப்பானது அகன்று விரிந்ததாகக் காணப்படும். இப்பரப்பினுள் நெல்கதிர்களை மட்டும் பயிர் செய்யாமல் வெண்டை, கத்தரிக்காய் போன்ற காய்கறி வகைகளையும் பயிர் செய்து உணவின் பற்றாக்குறையினை நீக்கும் திறமைப்படைத்தவர்கள் மருதத்திணை மக்கள் என்பதை,

''பெரிதான வயலிவ ரப்பில்
பயிரிட்ட வெண்டைக் காயும்
பெரிதாகி பறித்தி டாதே
பெருநெற்றாய் மாறி முற்றி'' (திருமாவளவன் .பா-27)

திருமாவளவன் என்ற மரபுக்கவிதை வாயிலாகவும் நாரண.தொல்காப்பியன் விளக்கம் கூறுகிறார்.

நாற்று நடுதல்

வயல் வெளிகளில் உழவனாவன் மண் மணம் வீசும் சேற்றினுள் நாற்றினை நல்லோருடன் சூழ்ந்து நட்டிடுவார். பிடுங்கி நடும் நாற்றினை நடு சேற்றினுள் நடுவதற்கு முன்பு நன்செய் நிலங்களுக்கு வழிபாடுகள் செய்திடுவார்கள் மருதத்திணை மக்கள். நாற்றானது வளர்ந்த பின்பு அதில் முளைத்திருக்கும் களைக்களை ஒன்றிணைந்து மகிழ்வோடு பாட்டு இசைத்து பறிப்பார்கள் என்பதை,

''நாற்றாங் காலில் நாற்றடித்து
நல்லோர் சூழ்ந்தே நட்டிடுவர் !

*நாற்றை நடும் முன் நன்செய்க்கு*
*நலமே இடுவர் எருதளையை!*
*சேற்றில் பயிரும் வளர்ந்ததன்பின்*
*சேர்ந்தி ணைத்தே களைபறிப்பர்*
*ஏற்றத் தோடே பாட்டிசைத்தே*
*இணைந்தே பாடி மகிழ்ந்திடுவர்"(நாஞ்.வள்.பா- 23)*

*இவ்வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும்,*

*"உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்,*
*முடிநாறு அழுத்திய நெடுநீர் செறுவில்" (பெரும்பாண்.பா-210)*

*சேறாகிய வயலில், சேற்றினை சமம் பட செய்து உழவர்கள் நாற்றினை நட்டதை பெரும்பாணாற்றுப்படை வரிகள் மூலமும் அறிய முடிகிறது.*

*காவல் செய்தல்*

*நெற்கதிர்களும் செழுமையாக வளர்ந்திருக்கும் தருணங்களில் எலிகள் வளைத் தோண்டி பயிர்களை அறுத்து எடுக்கும். எலிகள் வயல் வரப்பினை அழிப்பதால் வயலினுள் தேங்கி நிற்கும் நீர் அனைத்தும் வெளியேறி பயிரின் நலன் கெடும். வரப்பினை எளிதாக எலிகள் துளைக்காமல் இருப்பதற்கு பெரிதாகவும், வலிமையானதாகவும் வரப்பு வெட்டி வனப்பாய் நெல்மணிகளை காத்திடுவார்கள். பறவைகளும் வரப்பினுள் வந்து நெற்கதிர்களை அழிக்காமல் இருக்க அரண்கள் பல அமைத்து விரட்டிடுவார்கள்.*

*"எலிகள் வரப்பைத் துழைப்பதினால்*
*எளிதாய் வயல்நீர் வெளியேறும்*
*எலிகள் துழைக்கா திருப்பதற்கே*
*ஏற்ற வகையில் வரப்பு வெட்டி*
*வலிய தாக அமைத்திடுவர்*
*வனப்பாய்க் காத்த நெல்மணியை*
*எலிகள் பறவை அழிக்காத*
*ஏற்ற அரண்கள் அமைத்திடுவார்!" (நாஞ்.வள்.பா-29)*

*மேலும் புறநானூறும்,*

*"நெல்விளை கழனிப் படுபுள் ஒப்புநர்" (புறம். பா-2)*

*நெல் விளைந்த வயலில் பறவைகளை விரட்டி, விளைந்த நெல்லைக் காத்துள்ளதை இவ்வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

*அறுவடைச் செய்தல்*

*நெற்கதிர்கள் முற்றி விளைந்திருப்பதை காணும் கண்களுக்கு எல்லாம் கழிப்பெய்திருக்கும். அறுவடை நேரத்தில் நெற்களத்தில் கதிரடித்து சீர்செய்திடுவார்கள் உழவர்கள். வயலிலுள்ள நெற்மணிகளை அறுத்தெடுத்து களத்தில் சேர்த்து வைத்த பின்பு கதிர் நெல்லினை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து வைப்பார்கள். வைக்கோலினை நெற்களத்திலேயே காய வைத்த பிறகு கூட்டமாக வைக்கோற் போரினை அமைத்திடுவார்கள். அத்தகைய உழவுத்தொழில் தான் உலகிலேயே சிறந்த தொழில் என்று உலகமேப் போற்றி வருகிறது.*

*"கதிர்கள் முற்றி விளைந்ததினை*
*காணும் கண்கள் கழிப்பெய்தும்!*
*களத்தைத் திருத்த கதிரடிக்க*
*களிப்பாய் சீர்செய் திடுவரங்கே!*
*கழனி அறுத்துக் களம்சேர்த்து*
*கதிர்நெல் பிரித்து வைக்கோலைக்*
*களத்தே காய வைத்துப்பின்*
*கூட்டி படப்பாய் அமைத்திடுவர்!"(நாஞ்.வள் பா-30)*

அறுவடைச் செய்யும் தன்மையினைப் பற்றி நாரண .தொல்காப்பியன் நாஞ்சில் வள்ளுவன் என்ற மரபுக்கவிதை வழியாக சிறப்பிகிறார் என்பதை அறிய முடிகிறது.மேலும்,

"நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப
அரிநர் கொய்வாள் மடங்க" (பதிற்று. பா- 19)

என்ற பதிற்றுப்பத்து வரிகள் அறுவடையின் சிறப்பினை எடுத்து உரைக்கிறது. மலைப் போன்று காட்சியளிக்கும் நெற்கதிர் கூட்டங்களை வருணிக்கிறது நற்றிணை பாடல் வரிகளும்,

"மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பின்
பெருநெல் பல்கூட்டு எருமை உழவ"(நற். பா-60)

இத்தகைய வளமை மிக்கது மருதத்திணை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

உணவு வகைகள்

மருத நிலத்தில் நெற்கதிர்களை மட்டும் விளைவித்து உணவுப்பொருளாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள். காராக் கருணை, கரிகருணை, கூகைக் கிழங்கு, பெருவள்ளி, காட்டுகரணை, சிறுவள்ளி, கோவை கிழங்கு, மரவள்ளி, சேனைக் கரணை, புளிக்கரணை, சேமைக் கிழங்கு போன்ற பலவகையான கிழங்கு வகைகளையும் பயிரிட்டு உணவிற்கு எடுத்துக் கொண்டதை,

"காராக் கருணை, கரிகருணை
கூகைக் கிழங்கு, பெருவள்ளி,
காட்டு கரணை சிறுவள்ளி,
கோவை கிழங்கு, மரவள்ளி
சேனைக் கரணை, புளிகரணை
சேமைக் கிழங்கு நிலப்பனமாம்
பேதிக் கிழங்கு அமுக்கிரவும்
பலவும் கிழங்கு பல்கியதே" (நாஞ்.வள். பா- 3)

இவ்வரிகள் மூலம் மருதத்திணையில் இவ்வகையான கிழங்குகளும் பயரிட்டுள்ளதை நாரண. தொல்காப்பியன் தெளிவுப்படுத்துகிறார். மேலும் எரிமிளகாய், மிளகு, சுக்கு, துவரைமொச்சை பொன்றவைகளையும் உணவுப் பொருள்களாக மருதத்திணை மக்கள் பயன்படுத்தி உள்ளதை,

"எரிமிளகாய் மிளகு சுக்கும்
இசைந்துண்ணும் துவரை மொச்சை
அரிதான உணவுப் பண்டம்
அத்தனையும் கிடைத்தங்கே" (நாஞ்.வள.பா-78)

என்ற நாஞ்சில் வள்ளுவன் மரபுக்கவிதை வரிகள் மூலம் நாரண. தொல்காப்பியன் தெளிவுப்படுத்துக்கிறார். மேலும் நெற்பயிர்களின் வகைகளும் கணக்கில் அடங்காத நிலையில் மருதத்திணையில் அமைந்துள்ளது. அவையாவன சன்னம் சம்பா, சீரகம் சன்னம், செம்பாளை, சாம்பல் வாரி, மல்லிகை, மணி சம்பா, மிளகு சம்பா, கல்லுண்டைச் சாம்பா, வெற்றிலை சம்பா பலவகைகளில் நெல்லினை விளைவித்து மருதத்திணை மக்கள் உணவிற்கு பஞ்சமின்றி செழிப்போடு வாழ்ந்திருப்பதை,

"சம்பாநெல் வகையை இங்கே.
சான்றோர்கள் பலவாய்ச் சொன்னார்!.
சன்னசம்பா. சீரகம் சன்னன்
செம்பாளை சாம்பல் வாரி
மல்லிகையாம் சம்பா நல்ல
மணிசம்பா மிளகு ச் சம்பா
கல்லுண்டைச் சம்பா என்றே
கணக்கில் லா வகையில் உண்டே" (திருமாவளவன். பா- 202)

இவ்வரிகள் மூலம் நாரண. தொல்காப்பியன் அரிசியின் வகைகளை எடுத்துக் கூறுகிறார்.

முடிவுரை

உழவுத்தொழில் என்பது திட்டமிட்டு சரியாகவும், திறம்படவும் செய்து முடிப்பதாகும். மனிதன் உயிர்வாழுவதற்கு மிகவும் அவசியமான ஒன்று உணவு. உணவு வகைகள் அன்றைய

காலம் முதல் இன்றைய காலம் வரை மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட தானிய வகைகளில் அதிக அளவு பயன்பாட்டிலிருந்த தானியமாக நெல் அமைந்துள்ளது. இதனால் மருதநில மக்களின் வாழ்க்கை தரமானது உயர்வடைந்ததை அறிய முடிகிறது. திணைக்களை ஐவகைகளாகப் பிரித்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என தொல்காப்பியர் இலக்கணம் பகுத்துள்ளார். இத்திணைகள் ஐந்தும் மக்களின் வாழ்வியலை பற்றியவை என்ற கருத்தினை அறிய முடிகிறது. முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல் ஆகிய நானிலங்களுக்கு மட்டும் நிலப்பகுப்புகள் இருந்ததாக முன்னோர்கள் வகுத்துள்ள செய்தியினைப் பற்றியும் அறிய முடிகிறது. மொழிக்கு மட்டுமன்றி மக்களின் வாழ்வியலுக்கும் பழந்தமிழர்கள் இலக்கணம் பகுத்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கிறது. மருதத்திணையானது முல்லை மற்றும் நெய்தல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பகுதியாக அமைந்துள்ளது. மருதத்திணையில் நெல்லின் வளமையினைப் பற்றியும், இந்நிலத்தில் வாழும் மக்களின் வறுமையற்ற வாழ்க்கை முறைகளைப் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அன்பு, பாசம், கருணை ஆகிய மூன்று பண்புகளும் தான் மருதத்திணை மக்களின் செழுமையான வாழ்விற்கு அடையாளங்களாக இருப்பதை அறிய முடிகிறது. ஒழுக்கமின்றி வாழ்தலை இழிவான செயல்களாகக் கருதினர். சுற்றத்தாருடன் கூடி வாழ்வதையே தான் மருதநில மக்கள் விரும்புகின்றனர் என்பதை பற்றி நாரண. தொல்காப்பியன் மரபுக்கவிதை வாயிலாக எடுத்துரைப்பதை அறிந்துக் கொள்ளலாம். வயலின் வளத்தை அதிகப்படுத்துவதில் முக்கிய பங்கு உழவரையே சார்ந்திருக்கும் என்ற செய்தியானது எடுத்துரைக்கப்படுகிறது. மண் மணம் வீசம் சேற்றினை சமம் செய்து நாற்று நட்டச் செய்தியினை அறிய முடிகிறது. செழுத்து வளர்ந்து இருக்கும் நெற்கதிர்களைப் பறவைகள், வயல் சார்ந்த உயிர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டி அரண் அமைக்கப்பட்ட நிகழ்வினை அறிய முடிகிறது. நெற்கதிர்களை அறுவடைச் செய்து மலைப் போன்று குவித்து வைக்கப்பட்ட நிகழ்வானது எடுத்துரைக்கப்படுகிறது. மருதநில மக்கள் அரிசியினை மட்டும் உணவாக உட்கொள்ளாமல் கிழங்கு வகைகளையும் உணவாகப் பயன்படுத்திய செய்தியினை அறிய முடிகிறது, உழவன் செய்யும் தொடர்பணியால் தான் உலக மக்கள் உயிரை பேணியிருக்கிறார்கள். இத்தகைய உழவுத்தொழிலை உயிராகக் கொண்டுள்ள மருதத்திணை மக்களின் உயர்ந்த வாழ்வியல் நெறிகளை புலவர் நாரண. தொல்காப்பியன் தனது மரபுக்கவிதைகள் வாயிலாக வெளிகொணர்ந்துள்ளார்.

*பார்வை நூல்கள்:-*

*[1].அரிராம கிருட்டினன். நா - முரசுகட்டில் மோசிகீரன், அன்னம்பதிப்பகம், குமரிமாவட்டம், முதற்பதிப்பு - ஏப்ரல்,2013.*

*[2].அரிராம கிருட்டினன். நா - திருமாவளவன் (கரிகால் சோழன் காவியம்), அன்னம் பதிப்பகம், குமரிமாவட்டம், முதற்பதிப்பு-ஜுன், 2009.*

*[3].அரிராம கிருட்டினன். நா - நாஞ்சில் வள்ளுவன், அன்னம் பதிப்பகம், குமரிமாவட்டம், முதற்பதிப்பு-ஜூலை,2013.*

*[4].சுப்பிரமணியன். ச. வே - பத்துப்பாட்டு (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டரம் பதிப்பு - நவம்பர் ,2022.*

*[5].கதிர். மகாதேவன் - நற்றினை (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு - நவம்பர் ,2022.*

*[6].தமிழண்ணல் - குறுந்தொகை (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு -நவம்பர்,2022.*

*[7].திருஞானசம்பந்தம். ச - தொல்காப்பியம் பொருளதிகாரம் (மூலமும் உரையும்), கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற்பதிப்பு - மார்ச்,2018.*

*[8].திருஞானசம்பந்தம். ச - அகப்பொருள் விளக்கம், கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற்பதிப்பு-நவம்பர்,2010.*

*[9].பரிமணம். அ. மா - பதிற்றப்பத்து, வர்த்தமானன் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு -நவம்பர், 2022.*

*[10].பிள்ளை. கே. கே - தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, பதினெட்டாம் பதிப்பு -செப்டம்பர் ,2022.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********